1974 ஏப்ரல் 8]

எனவே அந்த முறையில் இரண்டாயிரம் மெகாவாட்ஸ்க்குமேல் உற்பத்தி செய்யும் திறன் உள்ள அணுமின் நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மின்சார வாரிய அதிகாரிகள், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தென் கோடியில் தூத்துக்குடி பகுதியில் இரண்டு மின் நிலையங்களை அமைக்க வேண்டிய திட்டத்தைத் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவிலேயே ஒரு அணு மின் நிலையம் கூட அமைப்பதற்கான செயற் குறிப்பு அவர்களிடம் இல்லை என்று தெரிய வருகிறது. ஆனால் இது கட்டாயம் வேண்டும் என்பதை நிபுணர்கள் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். நீர் மின்நிலையம், நிலக்கரி மூலம் உற்பத்தி செய்யப்படுகிற அனல் மின்நிலையம் கட்டுவதால் பற்றாக்குறை ஏற்படும் காலத்தில் சிக்கல்கள் ஏற்படும். ஆகவே அணு மின் நிலையம் அமைப்பதன் அவசியத்தை மத்திய அரசுக்கு நிபுணர்கள் தெரிவித்து வருகிறார்கள். நாமும் அப்படித்தான் கேட்கிறோம்.

* 776 *Q*.—Thiru N. K. PALANISAMI :
Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Electricity be pleased to state the progress made in the construction of Kadambarai Hydro-Electricity Scheme?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** போபாலில் உள்ள நிறுவனம் ஒப்பந்தப் புள்ளியைப் பெற்றிருந்தும் என் மெஷினரிகளை அவர்கள் இங்கிலாந்தில் இருந்து தருவிக்கவேண்டும்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இதெல்லாம் க்ளோபல் டென்டர் என்று சொல்வார்கள். இதற்கு வேண்டிய கருவிகள் எல்லாம் இந்தியாவில் இன்டிஜீனஸ்-ஆக செய்யும் நிலையில் இல்லை. ஆகவே எந்த நாட்டில் இதுபோன்று நல்ல இயந்திரங்களை திறமைசாலிகள் செய்கிறார்கள் என்பதை விளம்பரப்படுத்தி அவை எல்லாம் வரப்பெற்று, மத்திய சர்க்காரின் அனுமதி பெற்றுத்

---

@ 594–602-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

தான், இந்த நாட்டு இயந்திரம் சரியாக இருக்கும் என்று ஒப்புதல் பெற்ற பிறகுதான் நடவடிக்கை எடுக்கிறோம். மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் இவை செய்யப்படுகின்றன.

* 777 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether power is being generated in Kothayaru Electricity System regularly; and

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) கோதையாறு மின்சாரத் திட்டத்தில் நிரந்தர உற்பத்தி நடைபெறுகிறது. இடையில் சில இடர்பாடுகள் ஏற்பட்ட காரணத்தால், நீடில் சமயத்தில் சரியாக வேலை செய்யாததால், இயந்திரத்தில் பழுது ஏற்பட்டதால் சில வேளைகளில் இயங்கவில்லை. இப்பொழுது முழுமையாக இயங்கும் நிலையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 100 மெகாவாட் இரண்டு பவர் ஹவுஸிலும் உற்பத்தித் திறன் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் எவ்வளவு உற்பத்தித் திறன் இப்போது ஆகிறது என்ற விவரத்தைத் சொல்வார்களா ? அதோடு, பழுதடைந்த மெஷினரிகள் எல்லாம் இப்போது ரிப்பேர் செய்யப்பட்டு விட்டனவா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** முழுமையாக இரண்டு பவர் ஹௌஸஸ்ஸும் ஓடுகிற நிலையில் இருக்கின்றன. கோதயாறைப் பொறுத்து, எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்பதல்ல. 100 மெகாவாட் இருந்தாலும் தண்ணீரை வைத்துக்கொண்டு இவ்வளவு காலத்திற்கு தண்ணீரைப் பயன்படுத்தவேண்டும் என்று தண்ணீர் நிறைய இருந்தால் நிறையச் செய்யலாம்—தண்ணீர் குறைவாக இருப்பதால் கோடை காலத்தில் பகிர்ந்து வைத்துச் செய்கிறோம். ஒவ்வொரு நாளும் எவ்வளவு யூனிட் உற்பத்தியாகிறது என்ற கணக்கு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்லலாம்.

**திரு. என். டென்னிஸ் :** பழுதடைந்த இயந்திரத்தைச் சீர்படுத்த பல காலமாகிறது. அதனால் குறிக்கோள்படி மின் உற்பத்தியில் தடை ஏற்படுகிறது. ஆதலால் இயந்திரங்கள் பழுதடைந்தவுடனே அவற்றை சீர்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?